அபிராமியே, எங்கும் உனதாட்சியே
அருள் கடலே, நீதான் ஆதரிப்பாயே (2)
அபிராமியே, எங்கும் உனதாட்சியே......

செண்பக மலரையும் அணிந்து கொண்டவள் நீ
சிவனின் பாதி யையும் எடுத்துக் கொண்டவள் நீ
இதயத்தை வருடியே ஏற்றுக் கொண்டவள் நீ
என் இதயத்தை வருடியே ஏற்றுக் கொண்டவள் நீ
அப்படியே இருக்க மனமும் உருகுதே
ஏன்னடி தாயே, கதறுகிறேன் நானே (2)
அபிராமியே, எங்கும் உனதாட்சியே
அருள் கடலே, நீதான் ஆதரிப்பாயே......
அபிராமியே, எங்கும் உனதாட்சியே......

தெய்வத் தாயாய் நீயும் வீற்றிருப்பவளே
இருளைக் களையும் ஜோதியாய் ஓங்கி நிற்பவளே
மனதில் உந்தன் நினைவைப் பதியச் செய்தவளே (2)
அப்படியே இருக்க மனமும் மருகுதே
ஏன்னடி தாயே, உருகினேன் நானே (2)
அபிராமியே, எங்கும் உனதாட்சியே
அருள் கடலே, நீதான் ஆதரிப்பாயே......
அபிராமியே, எங்கும் உனதாட்சியே......

ஆனந்தமாய் நீயும் நடனமாடினாய்
உருகியே நானும் பாடல் வடித்தேன்
கேட்டு நீயும் மகிழ இன்பம் பொங்குதே (2)
அப்படியே இருக்க மனமும் ஏங்குதே
ஏன்னடி தாயே, மருகினேன் நானே (2)
அபிராமியே, எங்கும் உனதாட்சியே
அருள் கடலே, நீதான் ஆதரிப்பாயே.....
அபிராமியே, எங்கும் உனதாட்சியே....